அலகு 10

27

அத்தியாயம்

# நிறுமச் சட்டம் மற்றும் செயலர் நடைமுறைகள்

# நிறும மேலாண்மை

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்.

-- குறள் 388

**பொருள் :** நீதி முறை செய்து குடிமக்களைக் காப்பாற்றும் மன்னவன், மக்களுக்கு தலைவன் என்றுக் கருதித் தனியே மதிக்கப்படுவான்.

2H6CF8

## கற்றல் நோக்கங்கள்

மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுவதற்கு

- நிறுமத்தின் மேலாண்மை கருத்தை புரிந்து கொள்ள
- இயக்குநர் யார், எப்படி அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு தகுதிகள் போன்றவை அறிய.
- இயக்குனர்கள் குழு, இயக்குனர்களின் சட்டபூர்வ நிலைப்பாடு பற்றிய விளக்கத்தை விளக்கவும்
- ஒரு நிறுமத்தில் இருந்து ஒரு இயக்குனரை எவ்வாறு அகற்றுவது என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவுதல்
- நிறுமத்தின் மேலாண்மை தொடர்பு. மற்ற நிர்வாக அதிகாரிகள் பற்றிய போதுமான அறிவு

ஆகியவற்றை புரிந்துக் கொள்ள இயலும்.

## அத்தியாயம் சுருக்கம்

27.00 அறிமுகம்
27.01 பொருள் மற்றும் இயக்குனரின் வரையறை
27.02 ஒரு நிறுமத்தின் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள் (அ) முதன்மை மேலாண்மைப் பணியாளர்கள்
27.03 இயக்குநர்கள் குழு
27.04 நிறுமங்கள் சட்டம் 2013 இன் படி இயக்குனர்கள் வகைகள்
27.05 இயக்குநர்களின் எண்ணிக்கை
27.06 சட்ட நிலை / இயக்குனர் நிலை
27.07 இயக்குநர்கள் நியமனம் தொடர்பான பொது விதிகள்
27. 08 இயக்குநர் தகுதிகள்
27. 09 இயக்குனர் தகுதியற்றவர்கள்
27. 10 இயக்குனர் அகற்றுதல்
27.11 இயக்குனரின் ஊதியம்
27.12 இயக்குனர்களின் அதிகாரங்கள்
27.13 இயக்குநர் உரிமைகள்
27. 14 இயக்குனர் கடமைகளை
27. 15 இயக்குனர் பொறுப்புகள்
27. 16 இயக்குனர்களின் பதிவேடு அல்லது இயக்குனர்கள் மற்றும் நிர்வாகத்தில் முக்கிய மேலாண்மை நபர்களின் பதிவேடு விதி 17 ன் படி
27.17 மேலாளர் Vs இயக்குனர்
27.18 நிர்வாக இயக்குனர் Vs முழு நேர இயக்குனர்

## அறிமுகம்

முந்தைய பாடம் நிறுமத்தின் தன்மை; மற்றும் கொள்கைகள் ஆகியன விரிவாக பார்க்கப்பட்டது. மேலும் நிறுமம் என்பது ஒரு முடிவில்லா வாழ்நாள் கொண்டது மற்றும் நிறுமத்தின் வாழ்க்கை உறுப்பினர்கள் மாற்றங்கள் காரணமாக பாதிக்கப்படவில்லை, அதாவது எந்த உறுப்பினர் வந்து போகலாம் ஆனால் நிறுமம் சட்ட விதிகள்அடிப்படையில் அதன் இறுதி வாழ்நாள் வரை இயங்குகிறது. இந்த பாடம், எப்படி இந்த நிறுமம் செயற்கை நபர்களால் நிர்வகிக்கப்படுகிறது என்பதை விவாதிக்கப்படுகிறது. இது மனிதர்களின் குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது.

நிறுமத்தின் வியாபாரத்தை நடத்துவதற்கான பொறுப்பை நிறைவேற்றும் மனிதர்களின் குழு இயக்குநர்கள் குழு என அறியப்படுகிறது மேலும் குழு உறுப்பினர்கள் தனித்தனியாக இயக்குநர் என அழைக்கப்படும்.

நிறுமங்களின் விவகாரங்களைக் கட்டுப்படுத்துவதும், வழிகாட்டுதலும், இயக்குவதும் மற்றும் நிர்வகிப்பதும் போன்ற, நிறுமத்தின் விவகாரங்களில் இயக்குநர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

எந்த நிறுமம் ஒட்டுமொத்த செயல்திறன் இயக்குநர்களிடம் உள்ளது, எனவே இதற்கு அவர்கள் மட்டுமே பொறுப்பாகும். நிறுமம் சங்கத்தின் அமைப்பு முறை ஆவணங்களில்/ விதிளில் பரிந்துரைக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கு தனித்தனியாக அல்லது கூட்டாக ஒவ்வொரு இயக்குனரும் பொறுப்பாவார்கள். இயக்குநர்கள் நியமனம் மற்றும் அவர்களது தகுதிகள், நிறுமங்கள் சட்டம் 2013 அத்தியாயம் XI இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிறுமத்தின் மேலாண்மையில் உள்ள இயக்குநர்கள் குழு அணுக்கரு நிலையை பெறுகிறது மேலும் அவர்களது தேர்வு, சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை மற்றும் நிறுமத்தின் செயல் முறை விதிகளுக்கேற்ப உள்ளது

எந்த நிறுமத்தின் வெற்றி அதன் இயக்குநர்களின் செயல்திறன் சார்ந்த செயல்பாட்டை சார்ந்துள்ளது, எனவே நிறுமத்தின் மேலாண்மையில் நிர்வாக இயக்குநர்கள் அதன் கண்கள், காதுகள், மூளை, கைகள், நரம்புகள் மற்றும் பிற முக்கிய உறுப்புக்கள் என குறிப்பிடலாம்.

இயக்குநர்கள் நிறுமங்கள் கொள்கைகளை உருவாக்கி அதன் அமைப்பு முறை ஆவணங்களில்/ விதிளில் உள்ள குறிக்கோள்களை அடைவதற்கு ஏதுவான அமைப்பை நிறுவுகின்றனர்.

## 27.01 இயக்குநர் பொருள் மற்றும் வரைவிலக்கணம்:

ஒரு நிறுமத்தின் நலனுக்காக அதன; செயலில் ஆர்வமுள்ள ஒருவர் மேலும் இயக்குநர்களின் குழுவில் உறுப்பினராக இருப்பவர் ஒரு நிறுமத்தின் இயக்குநர் என அழைக்கப்படுகிறார். ஒரு இயக்குநர் ஒரு நிறுமத்தின் செயல்பாட்டை வழிநடத்தும் அல்லது மேற்பார்வை செய்யும் இயக்குநர்கள் குழுமத்திலிருக்கும் ஒரு நபர் ஆவார்.

கம்பனிகள் சட்டம் 2013 பிரிவு 2 (34) ஒரு நிறுமத்தை நிர்வாகிக்கும குழுவிற்காக நியமிக்கப்பட்டவா; இயக்குநர் என்று வரையறுக்கிறது.

ஒரு நிறுமத்தின் இயக்குநர்களின் குழு உறுப்பினராக நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபரும், குழுவில் உள்ள மற்றவர்களுடன் சேர்ந்து கொள்கைகளை நிர்ணயிப்பதற்கும், செயல்படுத்துவதற்கும் பொறுப்பு உள்ளது. நிறுமத்தில் ஏதேனும் பங்குகளை வைத்திருத்தல் அல்லது பணியாளராக இருத்தல் அவசியமில்லை. இயக்குநர்கள் குழு கூட்டத்தில் தயாரிக்கப்பட்ட தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டும், நிறுமத்தின் செயல் முறை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படியும. இயக்குநர்கள் செயல்படுகின்றனர்.

**கம்பனியின் குறைந்தபட்ச / அதிகபட்ச எண்ணிக்கையிலான இயக்குநர்கள்** – கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 149 (1) பிரிவு 149 (1), 2013 ஒவ்வொரு பொது நிறுமத்திற்கும் குறைந்தபட்சம் 3 இயக்குநர்கள் இருக்க வேண்டும், ஆனால் ஒரு தனியார் நிறுமத்திற்கு இரண்டு இயக்குநர்கள், ஒரு நபர் நிறுமத்திற்கு ஒரு இயக்குநர் என கூறபட்டுள்ளது. ஒரு நிறுமம் அதிகபட்சமாக பதினைந்து (15) இயக்குநர்களை நியமிக்கலாம். மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் ஒரு பொது கூட்டத்தில் சிறப்பு தீர்மானம் நிறைவேற்றியபின், , பதினைந்துக்கும் மேற்பட்ட இயக்குநர்களை நியமிக்கலாம்.

ஒரு நிருவனம் தொழில் துவக்கம் பெருவர்க்கு ஓர் ஆண்டு காலத்திற்கு முன் மேற்கண்ட சட்ட விதிகளை பொற்றிறுக்க வோண்டும் என நிருவன சட்டம் 2013 கால அவகாசம் வழங்கியுள்ளது.

நிறுமச் சட்டத்தில் இயக்குநர்களுக்கு என எந்த பொது கடமைகளும் குறிப்பிடப்படவில்லைஇ சட்ட படி செய்ய வேண்டிய கட்டாயமில்லை ஆனால் அவர்கள் மேற்கொள்ள வேண்டிய சில பொது கடமைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

**நல்ல நம்பிக்கையில் செயல்பட வேண்டும்:** இயக்குநர்கள் நல்ல நம்பிக்கையில் செயல்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்இ அதாவது அவர்கள் எப்போதும் நிறுமத்தின் சிறந்த நலனுக்காக செயல்பட வேண்டும். இயக்குநர்கள் எந்த ரகசிய லாபம் ஈட்டும் செயல்களைச் செய்யக்கூடாது.

**மிகுந்த அக்கறையுடன் செயல்பட வேண்டும்:** இயக்குநர்கள் தங்கள் பணியை மிகுந்த கவனத்துடன் கையாள வேண்டும். அவர்கள் விவேகத்துடன் செயல்பட வேண்டும்.

**இயக்குநர்கள் தங்கள் பணியை தாங்களேச் செய்ய**

**வேண்டும்:** இயக்குநர்கள் தங்கள் பணியை தாங்களேச் செய்ய வேண்டும். அவர்கள் வேறு எவருக்கும் தங்கள் வேலையை ஒப்படைக்க கூடாது.


**இருப்பினும் பின்வரும் சந்தர்ப்பங்களில் இயக்குநர்கள் பணிக்கு வேறு யாராவது ஒருவருக்கு ஒப்படைப்பு செய்யலாம்.**

இது நிறும சட்டம் அல்லது செயல் முறை ஆவணம் அனுமதித்திருந்தால்.

சிறப்பு நிபுணத்துவத்தை கோருகின்ற சில வேலைகளை இயக்குநர்கள் செய்ய இயலாவிட்டால்இ அந்தப் பணிக்கான வேலைகளுக்கு ஒப்படைப்பு வழங்கப்படலாம்.

## 27.02 ஒரு நிறுமத்தின் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள் (அ) முதன்மை மேலாண்மைப் பணியாளர்கள் (Key Managerial Person (KMP) )

நிறுமச் சட்டம் 2013 பல புதிய கருத்துகளை அறிமுகப்படுத்தியுள்ளது அவற்றில் ஒன்று. ஒரு நிறுமத்தில் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள்: (Key Managerial Persons). இது நிர்வாக இயக்குநர் மற்றும் முழுநேர இயக்குனரின் வழக்கமான தலைமைப் பண்புகளை உள்ளடக்கியது மட்டுமில்லாமல் தலைமை நிதி அதிகாரிஇ தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் நிறுமத்தின் செயலாளர் போன்ற சில செயல்பாட்டுத் நபர்களையும் உள்ளடக்கியது.




**ஒரு நிறுமத்தின் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள் (அ) முதன்மை மேலாண்மைப் பணியாளர்கள்யார்?**

2013 ஆம் ஆண்டின் நிறும சட்டத்தின் பிரிவு 2 (51) இல் முக்கிய மேலாண்மையில்இ நிறுமத்தின் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள்: என்பதறகான வரையறை உள்ளது.

2013 ஆம் ஆண்டின் நிறும சட்டத்தின் பிரிவு 2 (51) இல் முக்கிய மேலாண்மையில்இ நிறுமத்தின் முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள்: என்பதறகான வரையறை உள்ளது.

(i) முதன்மை.ஃபிரதான நிர்வாக அதிகாரி

(ii) நிர்வாக இயக்குநர் அல்லது மேலாளர்;


(iii) நிறுமத்தின் செயலாளர்;

(iv) முழு நேர இயக்குநர்;

(v) முதன்மை.ஃபிரதான நிதி அலுவலர்; மற்றும்

(vi) அத்தகைய மற்ற அலுவலர்கள் பரிந்துரைக்கப்படலாம்

**பின்வரும் நிறுமங்கள் முக்கிய அதிகாரம் உள்ள நபர்களை நியமிக்கும் வேண்டும்:**




## 27.03 இயக்குநர்கள் குழு:

நிறுமச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுமத்தின் நிர்வாகக் குழு இயக்குநர் அவை என்று அழைக்கப்படுகிறது. நிறுமத்தை சரியான வழியில் வழிநடத்த பிரதான பிரச்சினைகள் மீது முடிவு எடுக்க அவர்களுக்கு அதிகாரமளித்தனர். நிறும வாரியம் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது

(i) கொள்கைகளை அமைக்கவும்,

(ii) இலக்குகளை மறுசீரமைத்தல்

(iii) நிர்வாக இயக்குநர் மற்றும் மூத்த நிர்வாகிகள் செயல்திறனை மதிப்பீடு செய்தல்.

(iv) ஒட்டுமொத்த இயக்கம்

(v) சட்டங்கள் ஏற்றுக்கொள்ளுதல்

(vi) பங்கு ஆதாயம் தொகையை தீர்மானித்தல்

(vii) கூடுதல் பங்குகளை வெளியிட.

பொதுவாக வாரியம் நிறுமத்தின் பரந்த இலக்குகளை நிர்வகிப்பதற்கு உதவுகிறது, நிர்வாகத்தை ஆதரிக்கிறது, நிறுமத்தில் கிடைக்கும் போதுமான ஆதாரங்களை மற்றும் அதன் பயன்பாட்டை உறுதிப்படுத்துகிறது.

### இயக்குநர்கள் குழுவில்அடங்கியுள்ள நபர்கள்:

**அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை:**

இயக்குநர்கள் குழு குறைந்தபட்சம் 1 பெண் இயக்குனருடன் கூடிய செயல்படும் நிர்வாக மற்றும் செயல்நிர்வாகம் அல்லாத இயக்குநர்கள் மற்றும் நிர்வாக இயக்குநர் குழுவில் ஐம்பது சதவீதத்திற்கும் கொஞ்சமும் குறைவின்றி செயல்நிர்வாகம் அல்லாத இயக்குநர்கள் கொண்ட ஒருங்கிணைப்பாக இருக்க வேண்டும்



12th Commerce Tamil Unit 10.indd 252 21-02-2020 14:45:32




**ஆ) செயல்நிர்வாகம் அல்லாத இயக்குநர் தலைவராக இருக்கும் போது :**

இதில் குறைந்தபட்சம் மூன்றில் ஒரு பங்கு செயல்நிர்வாக இயக்குநர்கள் சுதந்திர இயக்குநர்களாக இருக்க வேண்டும். கம்பனிக்கு வழக்கமான செயல்நிர்வாக அல்லாத இயக்குநர் தலைவுhf இல்லாத நிலையில், இயக்குநர் குழு உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 50 சதவீதம் சுதந்திர இயக்குநர்களை கொண்டு இருக்க வேண்டும்

**இ) செயல்நிர்வாக அல்லாத இயக்குநர்:**

செயல்நிர்வாக அல்லாத இயக்குநர் தோற்றுவிபாளாராக இருக்கும் போது அல்லது அவர் தோற்றுவிபாளாருடன் தொடர்புடையவாக இருக்கும் போது அல்லது இயக்குநர் குழுவிற்கு சமமான மட்டத்தில் இடம்பெற்றிருக்கும் போது அல்லது இயக்குநர்கள் குழு மட்டத்தில் ஒரு நிலை கீழே இடம்பெற்றிருக்கும் போது:

இயக்குநர் குழு உறுப்பினர்களில் குறைந்தபட்சம் 50 சதவீதம் சுதந்திர இயக்குநர்களை கொண்டு இருக்க வேண்டும்

ஒரு இயக்குநர் நிறுமத்தின் குழுவில் நியமிக்கப்படுகிறார், அத்தகைய இயக்குநர்கள் நிறுமத்தின் குறிக்கோளை அடைவதற்கு வித்தியாசமான அணுகுமுறை கொண்டு இருக்க வேண்டும்.

அவர்களின் வித்தியாசமான அணுகுமுறையின் படி நிறுமங்கள் சட்டம் 2013 அவர்களை கீழ் கண்டவாறு வகைப்படுத்தப்படுகின்றது.

**முழுநேர இயக்குநர்**

நிறுமத்தின் இயக்குனராக பணிபுரியும் ஒருவர் தனது வேலை நேரம் முழுவதையும் நிறுமத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்துவதும் மேலும் இதன் மூலமாக நிறுமத்திற்கு வருமானம் ஏற்படும் வகையில் குறிப்பிடத்தக்க நேரடி ஆர்வத்தைக் காட்டுபவரும் முழுநேர இயக்குநர் ஆவார்

**மேலாண்மை இயக்குநர்**

இயக்குனராக நிறுமத்தில் பணி புரியும் ஒருவர் அதிகபட்சமான அதிகாரங்களை கொண்டவருமாக நிறுமத்தின் நிர்வாகத்தில் அதிக ஆர்வம் அதிகபட்சமான சுதந்திரமும் உடையவர் நிறுமத்தை வழிநடத்துவதற்கும் இயக்குநர்களை கட்டுப்படுத்தும் உரிமையும் இவருக்கு உண்டு

**செயலாக்க இயக்குநர்**

இவர் நிறுமத்தின் முதன்மை தலைமை அதிகாரி என்ற பொறுப்பை வகிக்கிறார் இவர் நிறுமத்தின் நோக்கநிலையை அடையும் பொருட்டு தேவையான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் பொறுப்பை வகிக்கிறார் மேலும் நிறும வெற்றிக்கு இவர் பங்கு முக்கியமாகிறது இன்றைய உலகளாவிய வர்த்தகத்தில் தலைவர் அல்லது தலைமை செயல் அலுவலர் அல்லது மேலாண்மை இயக்குநர் அல்லது CEO என்ற வார்த்தைகள் ஒரே பொருள் தரக்கூடிய இணைச் சொற்களாக பயன்படுத்தப்படுகின்றன

**செயலாக்கம் இல்லாத இயக்குநர்கள்**

இவர்கள் நிர்வாக வேளாண்மையில் அன்றாட பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது இல்லை ஆனால் கொள்கை முடிவுகள் எடுக்கும் போதும், திட்டமிடல் செயல்கள் செய்யும் பொழுதும் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். இது மட்டுமல்லாமல் நிர்வாக இயக்குநர்களை மேற்பார்வையிடும் பொறுப்பும் பங்குதாரர்களின் நலனுக்காக செயல்படும் பொறுப்பும் இவர்களுக்கு உண்டு.

**செயலாற்ற இயக்குனருக்கும் – செயலாற்ற இயக்குனருக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்**

செயலாக்க இயக்குநர்கள் முழுநேர இயக்குநர் அல்லது மேலாண்மை இயக்குநர்கள் என்ற பெயரில் பணியாற்றுகின்றார்கள் ஆனால் செயலாக்கமற்ற இயக்குநர்கள் முழுநேர இயக்குனராகவும் இருப்பதில்லை மேலாண்மை இயக்குநர்களாகவும் இருப்பதில்லை.

## 27.04 நிறுமச் சட்டம் 2013-ன்படி இயக்குநர்களின் வகைகள்:

**1. இந்திய குடியிருப்பு இயக்குநர்:**

இந்திய நிறுமச் சட்டம் 2013 பிரிவு 149 (3) ன் படி ஒரு நிறுமத்தின் இயக்குநர் கடந்த நாட்காட்டி ஆண்டில் ஒத்த காலத்தில் குறைந்தது 182 நாட்கள் இந்தியாவில் தங்கியிருக்க வேண்டும் அவ்வாறு உள்ளவரையே இந்திய குடியிருப்பு இயக்குநர் எனப்படுகிறார்

**2. சுதந்திர இயக்குநர்**

இந்திய நிறுமச் சட்டம் 2013 பிரிவு 149 (6) ன் படி இவர் ஒரு மாற்று இயக்குனராவார் கீழ்க்கண்ட நிறுமங்கள் குறைந்த பட்சம் இரண்டு சுதந்திர இயக்குநர்களை நியமிக்க வேண்டும் அல்லது கொண்டிருக்க வேண்டும் அவை

1 செலுத்தப்பட்ட மூலதனம் பத்து கோடிக்கு அல்லது அதற்கு மேல் உள்ள பொது நிறுமங்கள்

2 ஒரு பொது நிறும விற்பனையின் அளவு 100 கோடி அல்லது அதற்கு கொண்டிருந்தாள் மேலும்

3 ஒரு பொது நிறுமத்தின் கொடு பட வேண்டிய மொத்த கடன்கள், கடன் பத்திரம், பைப்புகளில் மதிப்பு 50 கோடி அல்லது அதற்கு மேல் இருப்பின்



12th Commerce Tamil Unit 10.indd 253 21-02-2020 14:45:32

### 3. சிறு பங்குதாரர்களின் இயக்குநர்

ஒரு பட்டியலிடப்பட்ட நிறுமம் ஒரு இயக்குனரை இவர்கள் சார்பாக நியமிக்கலாம் அவ்வாறு நியமனம் செய்ய குறைந்தபட்சம் 1,000 அல்லது பத்தில் ஒரு பங்கு பங்குதாரர்களுக்கு இது தொடர்பான எழுத்து மூலமான அறிவிப்பு செய்தியை வழங்கி இருக்க வேண்டும்

### 4. பெயரளவு இயக்குநர்

தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின்கீழ்நிதி நிறுமங்கள் நலன் கருதிஅல்லது ஏதாவது ஒரு ஒப்பந்தத்தின் படியோ அல்லது மத்திய அரசின் வழிகாட்டுதலின் படியும் நியமிக்கலாம்.

மேற்கண்டவற்றிலிருந்து அறிய வருவது

1. அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுமங்கள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நியமிக்கலாம்
2. மத்திய அரசு அல்லது இணையான நபர்களhy; நியமிக்கலாம்
3 அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர்கள் நிறுமத்தின் நலனை பாதுகாக்கும் பொருட்டு செயல்பட வேண்டும்

### 5. பெண் இயக்குநர்:

பிரிவு 149 (1) (a) படி ஒரு இயக்குநர் குழுவில் குறைந்த பட்சம் ஒரு பெண் உறுப்பினர் இருக்க வேண்டும் கீழ்க்கண்ட நிறுமங்கள் குறைந்த பட்சம் ஒரு பெண் ஏற்கனவே கொண்டிருத்தல் வேண்டும் அவை:

1 அனைத்து பட்டியலிடப்பட்ட பொது நிறுமங்கள்

2 எந்த நிறுமத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் 100 கோடி அல்லது அதற்கும் மேல் அல்லது

ஆ) விற்பனையின் அளவு 300 கோடி அல்லது அதற்கு மேல் இருக்கும் பொழுது

### 6. கூடுதல் இயக்குநர்கள்

நிறுமம் ஒரு தனிமனிதனை தேவைபட்டால் கூடுதல் இயக்குனராக நியமித்துக் கொள்ளலாம்

### 7. மாற்று இயக்குநர்கள்

ஒரு இயக்குநர் இந்தியாவில் குறைந்தது மூன்று மாதத்திற்கு மேல் இல்லையென்றால் அவருக்கு பதிலாக கூடுதல் இயக்குநர்களை இயக்குநர் குழு நியமிக்கலாம். இவ்வாறு நியமிப்பதற்கு நிறுமத்தின் செயல்முறை ஏட்டில் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் இயற்றி அதன் வாயிலாக நியமிக்கலாம்

இந்த மாற்று இயக்குநர் உண்மையான இயக்குனருக்கு முகவராக அல்லது பதிலாக கருதப்படமாட்டார்

### 8. நிழல் இயக்குநர்

இயக்குநர் குழுவில் இடம் பெறாத ஒருவர் ஆனால் நிறுமத்தை வழி நடத்த அதிகாரம் உள்ளவர் நிழல் இயக்குநர் எனப்படுவார் பிற்காலத்தில் அவர்கள் விருப்பப்பட்டால் இயக்குனராக நியமிக்கப்படலாம்

## 27.05 இயக்குநர்களின் எண்ணிக்கை

நிறுமச் சட்டம் 2013 பிரிவு 149 (1) ஒவ்வொரு நிறுமமும் குறைந்தபட்சம் / அதிகபட்சம் எவ்வளவு இயக்குநர்களை கொண்டிருக்க வேண்டும் என்று வரையறுத்துள்ளது. அவை:

### இயக்குநர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை

**பொது நிறுமம்**

ஒவ்வொரு பொது நிறுமம் குறைந்த பட்சம் மூன்று இயக்குநர்களுக்கொண்டிருக்க வேண்டும்

**தனி நிறுமம்**

ஒரு நபர் நிறுமம் ஒரு இயக்குனரை கொண்டிருக்க வேண்டும்

பிற நிறுமங்கள் இரண்டு இயக்குநர்களை கொண்டிருக்க வேண்டும்

### இயக்குநர்களின் அதிகபட்ச எண்ணிக்கை

ஒரு நிறுமம் அதிகபட்சமாக 15 இயக்குநர்களை நியமனம் செய்து கொள்ளலாம். ஒரு நிறுமம் பொதுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி 15 இயக்குநர்களுக்கு மேற்பட்ட இயக்குநர்களை நியமித்துக் கொள்ளலாம். இதற்கு மத்திய அரசின் அனுமதி தேவைப்படாது.

நிறுமச் சட்டம் 2013 தொடங்குவதற்கு முன்பாக உள்ள நிறுமங்கள் இத்தேவையை நிறைவேற்ற ஓராண்டு காலம் அவகாசம் அளிக்கப்பட்டது.

### இயக்குநர் நிலை:

நிறுமச் சட்டம் 2013 பிரிவு 165 இன் படி ஒரு நபர் அதிகபட்சமாக 20 நிறுமத்திள் இயக்குநர் நிலை பொற்று இயங்கலாம், ஆயினும் பொது நிறுமம் ஒன்றின் துணை நிறுமமாக உள்ள பொது நிறுமங்கள் அல்லது தனி நிறுமமாக இயக்குநர்களை 10 ஆக வரையறுக்கப்பட்டிருக்கிறது. மேலும் நிறுமம் ஒன்றின் உறுப்பினர்கள் மேலே தந்துள்ள எல்லையை சிறப்பு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி வரையறை செய்து கொள்ளலாம். ஆனால் 20 நிறுமங்களில் இயக்குநர்களை எந்த எல்லைக்கு செயலற்ற நிறும இயக்குநர் நிலை சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் முறையே 20 அல்லது பத்து நிறுமங்களில் இயக்குனராக உள்ள எவரேனும் இச்சட்டம் தொடக்கத்திலிருந்து ஓராண்டு காலத்திற்குள் எந்த நிறுமத்தில் தொடர்ந்து பணியாற்ற விருப்பமாக உள்ளார்இ எதிலிருந்து விலகி உள்ளார் என்பதை தேர்ந்தெடுத்து அதனை உரிய நிறுமத்திற்கும் உரிய பதிவாளருக்கும் அறிவித்துவிட வேண்டும். மேற்கூறிய கருத்துக்களை மீற ஒரு நபர் இயக்குனராக நிறுமத்தை பதவி ஏற்கிறார் ஏனில் அவர் குற்றம் தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் ₹பாய் 5இ000 –க்கு குறையாத ஆனால் 25 ஆயிரம் வரை அபராதத்திற்கு உள்ளார்.

## 27.06 இயக்குநர்களின் சட்டபூர்வ நிலைமை

இயக்குநராக நியமிக்கப்பட்ட ஒருவர் சில சமயங்களில் நிறுமத்தின் முகவர்களாகவும், சில சந்தர்ப்பங்களில் நிறுமத்தின் பங்குதாரர்களாகவும், சில சந்தர்ப்பங்களில் நிர்வாக பொறுப்பாண்மையர்களாகவும், சில சந்தர்ப்பங்களில் அலுவலர்களாகவும், அல்லது அதிகாரங்களாகவும் கருதவேண்டியுள்ளது.

எனவே இயக்குநர்களின் நிலையைப் பற்றி பல்வேறு தலைப்புகளில் கீழ்க்கண்டவாறு தனித்தனியாக கூறப்பட்டுள்ளது

### இயக்குநர்கள் முகவர்களாக:

நிறுமத்திற்கு என தனியாக உருவம் எதுவும் கிடையாது அது இயக்குநர்கள் மூலமே இயங்க இயலும் எனவே நிறுமத்திற்கும் இயக்குனருக்கும் உள்ள உறவு முதல்வருக்கும் அவருக்கும் உள்ள உறவு போன்றது என்று கூறுவதில் தவறு இல்லை.

#### உதாரணமாக 1

ஓலுணு என்ற சென்னையை அடிப்படையாகக் கொண்ட ஒரு தனி வரையறுக்கப்பட்ட நிறுமம் யோகி மற்றும் லோகு என்ற இரண்டு இயக்குனர்களை கொண்டிருக்கிறது. அந்நிறுமம் தனது வியாபாரத்தை கர்நாடகா மாநிலத்தில் துவங்க திட்டமிட்டு அதற்காக அலுவலக கட்டடம் அமைப்பதற்கு யோகி என்பவர் கர்நாடகா சென்று நிலத்தை வாங்கினார் அல்லது வீட்டை வாங்கினார். வீடு வாங்கியது அல்லது நிலத்தை வாங்கியது யோகி என்றாலும் அது நிறுமத்திற்கு சொந்தமானது எனவே யோகி என்பவர் முகவராக நிறுமத்திற்காக செயல்பட்டுள்ளார்.

நிறுமத்தின் சார்பில் ஒப்பந்தங்களில் ஈடுபடும்பொழுது இயக்குநர்கள் நிறுமத்தின் முகவராக செயல்படுகிறார்கள். இவ்வித ஒப்பந்தங்களில் இயக்குநர்களுக்கு தனிப்பட்ட பொறுப்பு ஏதும் கிடையாது. நிறுமத்தின் அமைப்பு சாசனம் அளித்துள்ள அதிகார வரம்புக்குள் செயல்படுகின்றனர்.

இயக்குநர்கள் முகவராக கருதப்படுகிறார்கள் தவிர ஆனால் அவர்கள் நிறுமத்தின் முழுநேர முகவரகள் அல்ல ஏனெனில் இயக்குநர்கள் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ஆனால் முகவர்கள் முதல்வரால் நியமிக்கப்படுகிறார்கள்.

#### உதாரணம் 2

உதாரணம் ஒன்றில் சொல்லப்பட்ட நிறுமத்தில் இயக்குனர் தன்னுடைய கவனம் குறைபாட்டின் காரணமாக அரசுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரியை செலுத்த தவறிவிட்டார். இந்நிலையில் அரசு அவர் மீது வரியை வசூல் செய்ய வழக்கு தொடங்குகிறது, என்றால் இதற்கு அந்த இயக்குனர் தனி பொறுப்பு ஏற்க வேண்டும் ஏனெனில், இது அவரின் பொறுப்பற்ற செயலால் அல்லது கவனக்குறைவால் நிகழ்ந்தது ஆகும்

### மேலாளர்கள் பங்குதாரர்களாக இயக்குநர்கள்

நிறுமமேலாண்மை பன்முக நிர்வாகிகளின் கைகளில் உள்ளது. எனவே, இயக்குநர்கள் பங்குதாரர்களை நிர்வகிப்பவர்கள் மற்றும் பங்குதாரர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இயக்குநர்கள் பங்குதாரர்களுக்கு கூட்டளிகள் போன்றவர்கள்.

இருப்பினும், இயக்குநர்கள் அல்லது வெளியீட்டாளர்களுக்கு கணிசமான அதிகாரங்கள் ஒப்படைக்கப்படலாம், அத்தகைய நபர் இயக்குநர்களின் குழுமத்தின் மேற்பார்வை, கட்டுப்பாடு மற்றும் வழி யில் செயல்பட வேண்டும். எனவே, ஒரு கூட்டாண்மை நிறுமம் போலல்லாமல், ஒரு நிர்வாக இயக்குனராக எந்தவொரு அதிகாரத்தையும் வழங்க முடியாது.

### இயக்குநர்கள் பொறுப்பாண்மையர்:

இயக்குநர்கள் நிறுமத்தின் பொறுப்பாண்மையர்களாகக், கருதுவதும் ஒருவகையில் பொருத்தமானதாகும். நிறுமத்தின் பணம் முதலான சொத்துக்களை அவர்கள் ஒரு பொறுப்பாண்மையர் நிலையிலிருந்து கையாள வேண்டும். அவற்றை நிறும நலன்களுக்காகவே பயன்படுத்த வேண்டும். மேலும் இயக்குநர்கள் நிறுமத்தின் பொறுப்பாண்மையர் தவிர தனிப்பட்ட முறையில் உறுப்பினர்களின் பொறுப்பாண்மையர்களுக்கு விதிக்கப்பட்ட பல சட்டவிதிகள் இவர்களைப் பொறுத்தவரையில் பொருந்தாது.

#### உதாரணம் 3:

ஈஸ்வர் நிறுமம் இரண்டு இயக்குநர்கள் தீபா மற்றும் மணி. இயக்குனர்கள் 1இ000 பங்குகளை பொது மக்களுக்கு வழங்குகிறார்கள்இ பங்குதாரர்களிடம் இருந்து ஒரு பங்குக்கு ₹100 வீதம் பங்கு விண்ணப்பஇ பங்கு ஒதுக்கீடு மற்றும் பங்கு முதல் அழைப்பு பணம் பெற்றனர். அவர்கள் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு பங்குகளுக்கும் ₹100 செலுத்தவில்லை. இது நம்பகத்தன்மையை மீறுவதாகும்இ எனவே அவர்கள் பங்குகளுக்கு 100 ₹பாய் செலுத்த வேண்டும்.

### இயக்குநர் பணியாளர்களாக

இயக்குநர்கள் தங்கள் நன்மைக்காகவும் பங்குதாரர்களின் நலனுக்காகவும் நிறுமத்தை நிர்வகிக்கும் நிபுணர்களாக உள்ளனர். இருப்பினும், ஒரு இயக்குநர் ஒரு தனி ஒப்பந்தத்தில் பணிபுரியும் அதே நிறுமத்தில் பணிபுரிந்தால், பின்னர் இயக்குனருடன் கூடுதலாக, அவர் நிறுமத்தின் ஊழியர் அல்லது பணியாளராகவும் கருதப்படுகிறார். எளிமையான முறையில், நிறுமத்தின் முழுநேர ஊழியராக இயக்குநராக நியமிக்கப்பட்ட பிறகு குறிப்பிட்ட இயக்குநர்கள் ஊழியர் இயக்குநர் அல்லது முழு நேர இயக்குனராக கருதப்படுவர்.

**உதாரணம் 4:**

குணாலன் ஒரு நிறுமத்தின் இயக்குநராகவும், நிறுமத்தின் மேலாளராக செயல்படுவதற்கு கூடுதலான கட்டணத்தையும் எடுத்துள்ளார். ஆனால் மேலாளராக சேவை செய்வதன் மூலம் அவர் ஒரு ஊதியம் பெறுவதற்கு உரிமையுண்டு. எனவே அவர் ஒரு இயக்குநராகவும், நிறுமத்தின் ஒரு பணியாளராகவும் இருக்கிறார்.

### இயக்குநர்கள் நிறுமத்தின் அதிகாரிகள்:

"அதிகாரி" வார்த்தை இயக்குநர்கள், மேலாளர் அல்லது முக்கிய அதிகாரம் உள்ள நபர்கள் முதன்மை மேலாண்மைப் பணியாளர்கள் அல்லது யாருடைய வழிகாட்டுதல் திசைகளில் அல்லது அறிவுறுத்தல்கள் இயக்குநர்கள் குழு அல்லது இயக்குநர்களில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் செயல்பட அல்லது பழக்கப்படுத்தப்படுகின்றனர் என்பதை பொருத்தது. எனவே இயக்குநர் ஒரு நிறுமத்தின் அதிகாரிகளாகக் கருதப்படுவர். சில நேரங்களில், அவர்கள் சட்டத்தின் விதிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்காதபோது, நிறுமங்கள் சட்டத்தின் கீழ், தண்டனையினால் தண்டிக்கப்படுவார்கள்.

## 27.07 இயக்குநர்கள் நியமனம் நிறுமச் சட்டம் 2013 பிரிவு 152:

பொதுவாக, ஒரு பொது நிறுமத்தில் அல்லது ஒரு பொது நிறுமத்தில் ஒரு தனியார் நிறும துணை நிறுமமாகயிருக்கும் போது மொத்த இயக்குநர்களின் மூன்றில் இரண்டு பங்கு, பங்குதாரர்கள் நியமிக்கப்படுகின்றனர், மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு நியமனம்,செயல் முறை விதிகள் படி இல்லையெனில் பங்குதாரர்கள் மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கை நியமிக்க வேண்டும்.

ஒரு தனியார் நிறுமத்தில், இது ஒரு பொது நிறுமத்தின் ஒரு துணை நிறுமமாக இல்;லாத போது எந்தவொரு அல்லது அனைத்து இயக்குநர்களையும் நியமிக்கும் விதத்தை செயல் முறை விதிகள் படி நியமிக்க வேண்டும். செயல் முறை விதிகளபy; எந்த வழிகாட்டுதல்களும் இல்லாத போது இயக்குநர்கள் பங்குதாரர்களால் நியமிக்கப்பட வேண்டும்.

எந்தவொரு நிறுமம் விகிதாசார பிரதிநிதித்துவத்தின் கொள்கையை பின்பற்ற விரும்பினால் நிறுமங்களின் சட்டத்தின் படி மூன்றில் இரண்டு பங்கு இயக்குநர்களை நியமிக்கும் பொருட்டு நிறுமங்கள் சட்டம் அனுமதிக்கிறது.

அடக்குமுறை அல்லது தவறான நிர்வாகத்தின் காரணமாக மூன்றாம் தரப்பினரால் அல்லது மத்திய அரசாங்கத்தால் நியமனம் இயக்குநர்கள் நியமிக்கப்படலாம்.

### இயக்குநர்கள் நியமனம் தொடர்பான பொது விதிகள்:

1. நிறுமம், சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால், ஒவ்வொரு இயக்குனரும் பொது கூட்டத்தில் நியமிக்கப்படுவார்கள்.
2. நிறுமத்தின் இயக்குநரை நியமிப்பதற்கான இயக்குநர் அடையாள எண் கட்டாயமாகும்.
3. ஒரு இயக்குனராக நியமிக்கப்படுவதற்கு முன்மொழிந்த ஒவ்வொரு நபரும் அவரது இயக்குநர் அடையாள எண் மற்றும் ஒரு சட்டத்தின் கீழ் ஒரு இயக்குனராவதற்கு தகுதியற்றவர் என்று அறிவிக்க வேண்டும்.
4. ஒரு இயக்குனராக நியமிக்கப்பட்ட ஒரு நபர் அன்றோ அல்லது அதற்கு முன்னர் நேரடியாக அலுவலகத்தை நடத்த தனது ஒப்புதலை வழங்க வேண்டும். அதாவது அந் நிறுமத்தின் இயக்குனராக செயல்பட ஒப்புதல் வழங்க வேண்டும்.
5. இயக்குநர்கள் நியமிக்கப்பட்ட 30 நாட்களுக்குள் இயக்குநர்களால் கையொப்பமிடப்பட்ட ஒப்புதலுடன் தேவையான கட்டணத்தை செலுத்தி நிர்வாக இயக்குநர்கள் மற்றும் முக்கிய மேலாண்மை பணியாளர்கள் பற்றிய விவரங்களை நிறுமத்தின் பதிவாளருக்கு உரிய படிவத்தில் பதிவு செய்ய வோண்டும்
6. அனைத்து இயக்குநர்களுக்கும் ஓய்வு பொருதல் தொடர்பான விவகாரங்கள் செயல் முறை விதிகளில் கூறபட்டபடி வழங்கலாம். இல்லையென்றால் சட்டப்படி அது முடிவு செய்யப்படும்.

### முதல் இயக்குநர்

"முதல் இயக்குநர்கள்" நிருவனம் கூட்டுருவாக்கம் செய்யப்பட்ட தேதி முதல் அலுவலகத்தை இயக்குபவர்கள். முதல் இயக்குநர் பெயர் வழக்கமாக நிறும செயல் முறை ஏட்டில் குறிப்பிடபட்டிருக்கும அல்லது இயக்குநர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

ஒரு நபர் நிறுமத்தின் வழக்கில்இ ஒரு உறுப்பினராக இருப்பவர்இ 152 வது பிரிவின் விதிமுறைகளுக்கு இணங்கஇ இயக்குநர் (கள்) உறுப்பினரால் நியமிக்கப்படும் வரை அதன் முதல் இயக்குனராக கருதப்படுவார்.

## 27.08 இயக்குநர் தகுதிகள்

நிறுமம் செயல்முறை விதிகளுக்கு வெளிகளில் கூடிய உள்ளவாறு தேவையான தகுதிகளை பெற்றிருத்தல் வேண்டும். பொதுவாக ஒரு இயக்குநர், நிதி, சட்டம், மேலாண்மை, விற்பனை, சந்தைப்படுத்தல், நிர்வாகம், ஆராய்ச்சி, பெருநிறும ஆளுமை, தொழில்நுட்ப செயல்பாடுகள் அல்லது நிறுமத்தின் வணிக தொடர்பான பிற துறைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில் பொருத்தமான திறன்கள், அனுபவம் மற்றும் அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு இயக்குநர் சரியான மனநிலை உடைய நபர் இருக்க வேண்டும்.

ஒரு இயக்குநர் நிறுமம் செயல் முறை புத்தகதில் குறிப்பிட்டுள்ள தகுதி பங்குகள் வைத்திருக்கக வேண்டும்.

ஒரு இயக்குநர் தனிநபராக இருத்தல் வேண்டும்

நல்ல நிதிநிலை உடையவராக இருத்தல் வேண்டும்

நீதிமன்றத்தால் எந்தவிதமான குற்றத்திற்காகவும் குற்றவாளி என அறிவிக்கப்பட்டாமல்/ தண்டிக்கப்படாமல் இருத்தல் வேண்டும்

## 27.09 இயக்குநராக தகுதியற்றவர்கள்

நிறுமம் சட்டத்தின் 164 ஆம் பிரிவின்படி நிறுமத்தின் இயக்குனராக தகுதியற்றவர்கள் பின்வருமாறு

அ. பித்தநிலை பிடித்தவர் என தகுதி வாய்ந்த அதிகார நீதிமன்ற கண்டுபிடிப்பு மற்றும் அமலில் உள்ள போது

ஆ. திவாலானவர் என நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டவர்

இ. திவாலானவர் என அறிவிக்கக் கோரி நீதிமன்றத்தில் விண்ணப்பித்துள்ள, அவரது விண்ணப்பம் நிலுவையில் உள்ளது போது

ஈ. நீதிமன்றத்தில் குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு ஆறு மாத காலத்திற்கு குறையாமல் சிறைதண்டனை பெற்று இருப்பவர்கள் (எனினும் தண்டனை காலம் முடிந்து 5 ஆண்டுகள் கழித்து பிறகு அவரை இயக்குனராக நியமித்ததை சட்டம் ஏற்றுக் கொள்கிறது)

உ. அழைப்பு பணம் செலுத்தாமல் இருப்பவர்கள்

ஊ. நீதிமன்றம் அல்லது திருப்பாயத்தால் தகுதியற்றவர்கள் என தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டவர்கள்

எ. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஏதேனும் சமயம் பிரிவு 188 இன் கீழ் தொடர்புடைய நபருடன் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது குற்றம் புரிந்தவர் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள்

ஏ. இயக்குநர் அடையாள எண்ணை பெறாதவர்

## 27.10 இயக்குநர் நீக்கம்:

நிறுமத்தின் இயக்குநர், அவருடைய பணி காலம் முடிவடைவதற்கு முன்னர், அவரது அலுவலகத்திலிருந்து நீக்கப்படலாம்

1. பங்குதாரர்கள்
2. மத்திய அரசு
3. நிறுமச் சட்ட வாரியம்

**ஒரு இயக்குநர் தனது அலுவலகத்திலிருந்து பின்வரும் மூன்று வழிகளில் ஏதேனும் ஒரு வழியில் நீக்கப்படலாம்:**

### 1. பங்குதாரர்களால் நீக்கம் – பிரிவு (169)

ஒரு நிறுமம் (பொது அல்லது தனியார்) ஒரு சிறப்பு அறிவிப்பை வழங்குவதன் மூலம், ஒரு சாதாரண தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம், ஒரு இயக்குனரை பதவியில் இருந்து காலாவதியாகும் முன்பாக நீக்கலாம். தவறான நிர்வாகம், நம்பிக்கை இழப்பு, தவறாகச் செயல்படுதல் அல்லது இயக்குனரின் பகுதியிலுள்ள மற்ற தவறான நடத்தை ஆகியவற்றின் ஆதாரம் இருக்க வேண்டிய அவசியமில்லை. இயக்குநர் பின்பற்றிய கொள்கைகள் பொருத்தமானதல்ல என்று பங்குதாரர்கள் கருதினால், அவர் நீக்கப்படலாம். பொது கூட்டத்தில் ஒரு சாதாரண தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் பங்குதாரர்கள் அவ்வாறு செய்ய முடியும்.

### 2) மத்திய அரசால் நீக்கம்

நிறுமச் சட்ட வாரியத்தின் பரிந்துரையின் பேரில் நிர்வாக அதிகாரிகளை அலுவலகத்தில் இருந்து அகற்ற மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு எந்த நிர்வாக அதிகாரிகளுக்கு எதிராக நிறுமச் சட்ட வாரியத்திற்கு பரிந்துரைக்கும் அதிகாரம் உள்ளது. மத்திய அரசின் கருத்துப்படி பரிந்துரைக்கும் சூழ்நிலைகள்:

(i) ஒரு நிறுமத்தின் விவகாரங்களுக்கான நடத்தை மற்றும் மேலாண்மையில் சம்பந்தப்பட்ட ஒரு நபர் சட்டத்தின் கீழ் தனது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் மோசடி, தவறாகச் செயல்படும்தன்மை, தொடர்ந்து கவனமின்மை, நம்பிக்கை இழப்பு சம்பந்தப்பட்ட குற்றவாளி / குற்றங்களில் தொடர்புடைய குற்றவாளி. அல்லது

(ii) ஒரு நிறுமத்தின் வியாபாரமானது, சிறந்த வணிகக் கொள்கை அல்லது விவேகமான வர்த்தக நடைமுறைகளுக்கு ஏற்ப, அத்தகைய நபரால் நடத்தப்பட அல்லது நிர்வகிக்கபடவில்லை; அல்லது

(iii) ஒரு நபரால் நடத்தப்படுவதால் அல்லது நிர்வகிக்கப்படுவதால் நிறுமத்தில் ஏற்படும் கடுமையான வியாபார பாதிப்பு அல்லது வர்த்தகம், தொழில் அல்லது வியாபாரத்தின் கொள்கை சேதம் ஏற்படுதல் சம்பந்தப்பட்டிருத்தல் அல்லது

(iv) நிறுமம், அதன் வணிகர்கள், கடனாளிகள், உறுப்பினர்கள் அல்லது வேறு நபர்கள் அல்லது மோசடி அல்லது சட்டவிரோத நோக்கத்திற்காக அல்லது பொது நலனுக் சேதமளிக்கதக்க விதத்தில் மோசடி செய்ய விரும்பும் நோக்கத்துடன் அந்த நிறுமம் நிர்வகிக்கப்பட்டால்.

### 3) நிறுமச் சட்ட வாரிய த்தால் நீக்கப்படுதல்

கம்பனி சட்ட விவகாரத்தை ஒரு இயக்குனரால் ஒடுக்குதலுக்கும் தவறான நிர்வாகத்திற்கும் எதிராக ஒரு நிறுமத்தின் சட்ட வாரியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டால், நிறுமத்தின் சட்ட வாரியத்தால் இயக்குநர் நீக்கப்படலாம் அல்லது நிறுமத்திற்கும் இயக்குநருக்கும் இடையில் உருவாக்கப்பட்ட எந்தவொரு ஒப்பந்தத்தையும் ஒதுக்கி வைக்கப்படலாம். அத்தகைய இயக்குநர் அவரது அலுவலகத்திலிருந்து அகற்றப்படலாம். மற்றும் அத்தகைய இயக்குநர் அல்லது நிர்வாக இயக்குநர், கம்பனி சட்ட ஆணையத்தின் தேதி முதல் ஐந்து ஆண்டுகளுக்கு நிர்வாக அலுவலகத்தை நடத்த முடியாது.

## 27.11 இயக்குனரின் ஊதியம்

நிர்வாக நபர்கள்/ அதிகாரிகள் ஏன்ற சொல் நிர்வாக இயக்குநர், முழுநேர இயக்குநர், பகுதி நேர இயக்குநர்கள் மற்றும் மேலாளர்கள் உள்ளிட்ட நபர்கis உள்ளடக்கியது. இவர்கள் நிறுமம் சட்டம் 2013, பிரிவு 197 ன் விதிமுறைகளுக்கு இணங்க, ஊதியம் வழங்கப்படுவார்கள்.

### மேலாளர் ஊதியம்:

பிரிவு 196 ன் கீழ் நியமிக்கப்பட்ட ஒரு நபருக்கு மேலாண்மைப் ஊதியம் செலுத்தப்படுகின்றது. ஊதியம் என்ற வார்த்தையில் பணமோ அல்லது அதற்கும் சமமானதாகவோ அல்லது அவருக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்குகன செலவினங்களும் அடங்கும்.

1. இலவச வாடகை – அல்லது வாடகை சலுகையின் மதிப்பு
2. விலையில்லா அல்லது சலுகைக் கட்டணத்தில் வழங்கப்படும் வேறு எந்த பொருட்களின் மதிப்பு.
3. இலவசமாக ஊழியருக்கு நிறுமத்தால் அல்லது முன் பணி செய்த நிறுமத்தால் ஒதுக்கப்பட்ட/ வழங்கப்பட்ட/ மாற்றப்பட்ட, பணியாளர் அல்லது உழைப்பு பங்குகளின் (sweat equity shares) மதிப்பு.
4. ஒரு லட்சம் ₹பாய்க்கு மேலதிகமாக ஒரு அங்கீகரிக்கப்பட்ட பணியமர்த்தல் நிதிக்கு நிறுமத்தால் வழங்கப்பட்ட பங்களிப்பு.
5. பரிந்துரைக்கப்பட சில துணைப்பயன்கள் அல்லது மற்ற நன்மைகளின் மதிப்பு
6. அனைத்து இயக்குநர்களின் ஊதியத்தின் ஒரு பகுதியாக பங்கு விருப்ப த்தின் மதிப்பு இருக்கும். பங்கு விருப்பத்தை பெற சுயாதீன இயக்குநர்க்கு உரிமை இல்லை.

### மேலாளர் ஊதியம் மூன்று வழியில் கணக்கிடப்படுகிறது அவை:

1. நிறுமம் லாபம் அடிப்படையில்
2. பங்குதாரர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில்
3. பங்குதாரர்களின் மற்றும் மத்திய அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில். மேலாண்மை நபர்களுக்குகன அனுமதிகப்பட ஊதியம்:

### நிறுமத்தில் போதுமான இலாபம் இருப்பின்:

ஒரு பொது நிறுமம் நிர்வாக இயக்குநர்கள் மற்றும் முழு நேர இயக்குநர்கள் உட்பட அதன் இயக்குநர்களுக்கு வழங்கும் ஊதியம் அதன் நிகர லாபத்தில் 11% ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது மற்றும் ஒரு நிறுமத்தில் ஒரே ஒரு நிர்வாக இயக்குநர் அல்லது முழு – நேர இயக்குநர் அல்லது மேலாளர், நிகர லாபத்தின் 5% ஐ தாண்டக்கூடாது. வழங்கப்பட்ட ஊதியம் 11 சதவிகிதத்திற்கும் அதிகமாக இருந்தால் 2013 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டம், 198 ன் பிரிவின் கீழ் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதத்தில் கணக்கிடப்படுகிறது.

### ஒரு நிறுமம் மூலம் அதிகபட்சமாக நிறுமத்தின் மேலாளருக்கு வழங்கப்பட வேண்டிய ஊதியம்:

லாபமற்ற அல்லது போதுமான லாபமற்ற நிறுமம் ஒன்றில் அளிக்கப்படும் ஊதியத்தில் குறைந்த அளவு விகிதம் ரூபாய் மதிப்பில்:

| மூலதனத்தின் அளவு | |
|---|---|
| iv. எதிர்மறையான அல்லது ₹5 கோடிக்கு குறைவு | ₹30 லட்சங்கள் |
| v. ₹5 கோடி மற்றும் அதற்கு மேல் ஆனால் நூறு கோடிக்கு குறைவு | ₹42 லட்சங்கள் |
| vi. ₹100 கோடி மற்றும் அதற்கு மேல் ஆனால் 250 கோடிக்கு குறைவு | ₹60 லட்சங்கள் |
| vii. ₹250 கோடி மற்றும் அதற்கு மேல் செலுத்தப்பட கூடிய ஆண்டு ஊதியத்தின் உச்சவரம்பு ரூபாய் மதிப்பில் | ₹60 லட்சங்கள் + 250 கோடிக்கு மேற்பட்ட மூலதனத்தில் 9.91% |

## 27.12 இயக்குநர்களின் அதிகாரங்கள்

இயக்குநர்களின் அதிகாரங்கள் நான்கு வெவ்வேறு தலைப்புகளில் வகை செய்யப்பட்டுள்ளது அவை

1. இயக்குநர்களின் சட்டப்படியான அல்லது சட்டபூர்வமான அதிகாரங்கள்
2. நிர்வாக ரீதியான இயக்குநர்களின் அதிகாரங்கள் அல்லது மேலாண்மை தொடர்புடைய இயக்குநர்களின் அதிகாரங்கள்
3. தீர்மானத்தின்மீது இயக்குநர்களின் அதிகாரங்கள் தீர்மானங்களின் மீது இயக்குநர்களின் அதிகாரங்கள்
4. இதர அதிகாரங்கள்

### I. சட்டப்படியான அதிகாரங்கள்

நிறுமத்தின் பொதுக்கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதன் மூலம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டிய இயக்குனருக்கான அதிகாரங்கள் பின்வருமாறு

1. பங்குதாரர்களிடம் இருந்து வரவேண்டிய பங்குகள் மீதான செலுத்தப்படாத அழைப்புகளை பெறுவதற்கான அதிகாரம்
2. கடன் பத்திரங்களை கடனீட்டு பத்திரங்கள் வெளியிடுவதற்கான அதிகாரம்
3. கடனீட்டுப் பத்திரம் நீங்கலாக இதர வழிகளில் கடன் வாங்குவதற்கான அதிகாரம்
4. நிறுமத்தின் நிதியை முதலீடு செய்யும் அதிகாரம்
5. புதிய படங்களை உருவாக்கும் அதிகாரம்
6. நிறுமத்தின் வியாபாரத்தை பல்வகைப்படும் அதிகாரம்
7. ஒருங்கிணைத்தல், ஒன்று சேர்த்தல், மற்றும் மறுசீரமைப்பு செய்தல் போன்றவற்றை அங்கீகரிப்பதற்கான அதிகாரம்
8. நிதிநிலை அறிக்கை மற்றும் இயக்குநர் குழுவின் அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கான அதிகாரம்

### II. மேலாண்மை அல்லது நிர்வாக ரீதியான அதிகாரங்கள்

1. மூன்றாம் நபருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளும் அதிகாரம்.
2. பங்குதாரரான ஒதுக்கீட்டு உறுப்பில் அரிப்பு அல்லது பங்கு மாற்றம் செய்யும் அதிகாரம்
3. கடன் பத்திரங்களை வெளியிட வேண்டிய விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் முடிவு செய்யும் அதிகாரம்
4. புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும் வணிகத்தை செயல்படுவதற்கான வழிமுறைகளை உருவாக்கும் அதிகாரம்
5. நிறுமத்தின் நிர்வாக இயக்குநர் மேலாளர் மற்றும் நிறுமச் செயலரை நியமனம் செய்யும் அதிகாரம்
6. தன் கீழ் பணியாற்றும் ஊழியர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரம்

### III. தீர்மானத்துடன் கூடிய அதிகாரம்

1. நிறுமம் எந்த ஒரு சொத்தையும் விற்க அல்லது குத்தகைக்கு விடும் அதிகாரம்
2. கடனை திரும்ப செலுத்த இயக்குனருக்கு தேவையான காலத்தை அனுமதிக்கும் அதிகாரம்
3. செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் காப்புகள் ஆகியவற்றின் கூட்டுத் தொகைக்கு மேல் கடன் வாங்கும் அதிகாரம்
4. ஆண்டுகளுக்கு மேலாக ஒரு நபரை முகவராக நியமனம் செய்யும் அதிகாரம்
5. 5 மிகை ஊதிய பங்குகளை வெளியிடுதல் மற்றும் பங்கு மூலதனத்தை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பான அதிகாரம் 6 மூன்று ஆண்டுகளில் சராசரி லாபத்தில் 5% அல்லது ₹பாய் 50,000 இவை இரண்டில் எது அதிகமோ அத்தொகையை தொண்டு நோக்கங்களுக்காக பங்களிப்பு செய்வதற்கான அதிகாரம் அல்லது பயன்படுத்துவதற்கான அதிகாரம்

### IV. இதர அதிகாரங்கள்

1. சாதாரண காலிப்பணியிடங்களை நிரப்பும் அதிகாரம்.
2. நிறுமத்தின் முதல் தணிக்கையாளர் நியமிக்கும் அதிகாரம்.
3. மாற்று இயக்குநர்கள் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் முக்கிய நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம்.
4. முக்கிய நிர்வாக அல்லது மேலாண்மை அதிகாரிகளை நீக்கும் அதிகாரம்.
5. பங்குகளுக்கான இடைக்கால மற்றும் இறுதி வங்காளத்தை பரிந்துரை செய்யும் அதிகாரம்.
6. நிறுமத்தின் கடன் தீர்க்கும் நிலைமையை அறிவிக்கும் அதிகாரம்.
7. அரசியல் அமைப்புக்கு பங்களிப்பு செய்யும் அதிகாரம்.

## 27.13 இயக்குனரின் உரிமைகள்

இயக்குனரின் உரிமைகளை இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தலாம் தனி உரிமைகள் மற்றும் கூட்டு உரிமைகள்

### தனி உரிமைகள்

1. கணக்கு ஏடுகளை ஆய்வு செய்வதற்கான உரிமை
2. இயக்குநர் குழு கூட்டங்களின் அறிக்கைகளை பெறுவதற்கான உரிமை
3. தீர்மானங்கள் மீது பங்கேற்பதற்கும் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ வாக்களிக்கும் உரிமை
4. கூட்டத்தில் முன்மொழியப்பட இருக்கும் தீர்மானத்தை சுற்றறிக்கையாக பெறும் உரிமை
5. கூட்ட நடவடிக்கை புத்தகங்களை ஆய்வு செய்வதற்கான அதிகாரம்

### கூட்டு உரிமைகள்

**1. பங்குகளை மாற்றம் செய்வதை மறுக்கும் உரிமை**

தனியார் மற்றும் பொது நிறுமங்களின் இயக்குநர்கள் தங்களிடம் ஒப்புதல் பெறாத நபர்களுக்கு நிறுமத்தின் பங்குகளை மாற்றுவதை மறுப்பு தெரிவிக்கும் உரிமை.

**2. நிறுமத்தின் தலைவரை தேர்ந்தெடுக்கும் உரிமை**

இயக்குநர் குழுவின் தலைவரை நியமிக்கும் உரிமை இயக்குநர்களுக்கு உண்டு.

**3. மேலாண்மை இயக்குனரை நியமிக்கும் உரிமை**

இயக்குநர் குழு தன் அதிகாரத்தின் படி மேலாண்மை இயக்குநர் அல்லது மேலாளரை நியமிக்கும் உரிமை உண்டு.

**4. பங்காதாயத்தை பரிந்துரை செய்வதற்கான உரிமை**

ஆண்டு பங்கயம் சொல்லலாமா வேண்டாமா என தீர்மானிக்கும் உரிமை இயக்குநர் குழுவிற்கு உண்டு. பங்காதாயம் செலுத்துமாறு கட்டாயப்படுத்தும் உரிமை பங்குதாரர்களுக்கு கிடையாது. இருப்பினும் பரிந்துரைக்கப்பட்ட பங்காக விகிதத்தை குறைக்க முடியும் மேலும் பங்காரம் வழங்குவதற்கான தனி சிறப்பு இயக்குநர் குழுவிற்கு உண்டு.

## 27.14 இயக்குநர்களின் கடமைகள்

இயக்குநர்கள் பங்குதாரர்களின் முகவர்களும் பொறுப்பாளர்களாகவும் செயல்படுகின்றனர் எனவே அவர்கள் நிறுமத்தின் சொத்துக்களை பாதுகாக்க ஒரு நம்பகமான நம்பகமான பொறுப்பாளர்களாக கடமை ஆற்ற வேண்டியது கட்டாயம் இன்னும் எளிய முறையில் இயக்குநர்களின் கடமைகளை பின்வருமாறு விவரிக்கப்படுகிறது

### இயக்குநர்களின் ஒருங்கிணைந்த கடமைகள்

இயக்குநர் குழுவின் அங்கமாக உள்ள இயக்குநர்கள் கூட்டாக சில கடமைகளை செயலாற்ற வேண்டும் அவை பின்வருமாறு

1. ஆண்டுக் கணக்குகளின் மீது ஒப்புதல் அளித்து அதற்கு அதிகாரபூர்வமான சான்றாண்மை வழங்குதல்
2. காப்பு நிதிக்கு மாற்றம் செய்த தொகை, உபரி தொகையை முதலீடு செய்தல், கடன் வாங்குதல் போன்றவற்றை தெளிவுபட பங்குதாரர்களுக்கு அளிக்கப்படும் இயக்குநர்கள் அறிக்கையில் உயர்த்தி காட்டுதல்
3. நிறுமத்தின் முதல் தணிக்கையாளரை நியமனம் செய்தல்
4. இயக்குநர் கூட்டம் மற்றும் பங்குதாரர்கள் கூட்டம் பற்றிய அறிவிப்பு அளித்தல் மற்றும் கூட்டத்தை நடத்துதல்
5. இயக்குநர் குழு கூட்டத்தில் தீர்மானங்களை முன்மொழிதல் அல்லது நிறைவேற்றுதல்

### இயக்குனரின் பொது கடமைகள்

1. நிறுமத்தின் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு அல்லது அடையும் பொருட்டு புதிய கொள்கைகளை வகுத்தல்
2. நிறுமத்தின் நலன் கருதி செயல்முறை செயல்முறை விதிகள் அனுமதித்தாள் எந்த ஒரு குழுவுக்கும் அதிகாரத்தை ஒப்படைப்பு செய்யும் கடமை
3. நிறுமத்தின் வளர்ச்சியை சரிபார்ப்பது புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் மேலும் தொழிலாளிகளுக்கு அவ்வப்போது தேவையான கட்டளைகளை வழிகாட்டல்களை வழங்குதல்
4. தங்கள் பணியாற்றுவதற்காக மேலாண்மை இயக்குநர் மேலாளர் செயலர் மற்றும் இதர பணியாளர்களை நியமனம் செய்தல்
5. நிறுமத்தின் செயல்முறை விதிகளுக்கு உட்பட்டு செயலாற்றல்
6. நிறுமத்தின் நோக்கத்தை அடையும் பொருட்டு நல்ல எண்ணத்துடன் பணியாற்றல் அல்லது செயல்படுத்தல்
7. தேவையான அக்கறையுடனும் அர்ப்பணிப்புடனும் தன்னுடைய கடமைகளை உரிய நேரத்தில் நிறுமத்தின் நோக்கத்திற்கு ஏற்ப செயல்படுதல்

### இயக்குனரின் குறிப்பிடத்தக்க கடமைகள்

1. இயக்குநர்கள் தங்களின் பெயர் முகவரி மற்றும் தொழில் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களை அளிக்க வேண்டிய கடமை
2. இயக்குநர் நிறுமத்தில் தான் வைத்திருக்கும் பங்குகளைப் பற்றிய விவரங்களை தெளிவித்தல் மற்றும் நிறுமத்தின் ஒப்பந்தங்களை நிறைவேற்ற நிறைவேற்றுவதில் ஆர்வத்தை வெளிப்படுத்தும் கடமை
3. கம்பனின் இயக்குநர் தான் பதவியேற்ற இரண்டு மாத காலத்திற்குள் தேவையான குறைந்த அளவு பங்குகளை வாங்கி வைத்துக் கொள்ளுங்கள் வேண்டும்
4. தகவல் அறிக்கையை வெளியிடுதல் மற்றும்

குறைந்தபட்ச சந்தாவை நிர்ணயம் செய்யும் கடமை

5. வெளியிடப்பட்ட தகவல் அறிக்கையில் எந்தவிதமான தவறான தகவல்கள் இல்லை எனவும் தவறாக வழி காட்டக்கூடிய அறிவிப்புகளை கொண்டிருக்கவில்லை எனவும் உறுதி செய்யும் கடமை இயக்குனருக்கு உண்டு
6. தகவல் அறிக்கை சட்டத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து செய்திகளையும் கொண்டுள்ளதா என உறுதி செய்யும் கடமை
7. நிறுமத்தின் பதிவாளரிடம் தகவல் அறிக்கையை சமர்ப்பிக்கும் முன்னர் அதில் கையொப்பமிட்டு இருக்கவேண்டும்
8. பங்கு விண்ணப்ப தொகையை சட்டத்தில் குறிப்பிட்டுள்ள படி பயன்படுத்துவதற்கென அட்டவணையிடப்பட்ட வங்கியில் வைப்பு செய்யப்பட்டது உள்ளதா என்பதை சரிபார்க்கும் கடமை.
9. நிறுமத்தின் பதிவாளருக்கு பங்கு ஒதுக்கீடு தொடர்புடைய பட்டியலை சமர்ப்பிக்கும் கடமை
10. அறிவிக்கப்பட்ட பங்கயத்தை செலுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யும் கடமை
11. பங்குகளை ஒறுப்பிழப்பு அல்லது பறிமுதல் செய்யும் மற்றும் பங்குகளை மாற்றம் செய்யும் கடமை
12. நிறுமத்தின் பதிவாளருக்கு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி அனைத்து தீர்மானங்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிக்கும் கடமை
13. சரியான நேரத்தில் குறிப்பிட்ட செயல்களை சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து செயல்களையும் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்கும் கடமை
14. தேவைப்பட்டால்அசாதாரணபொதுக்கூட்டத்திற்கு அழைப்பு விடும் கடமை
15. நிறுமத்தின் சட்டபூர்வமான மற்றும் ஆண்டு பொதுக் கூட்டத்தை கூட்ட அழைப்பு விடும் கடமை

## 27.15 இயக்குநர்களின் பொறுப்புகள்

இயக்குநர்களின் பொறுப்புகளை மூன்று தலைப்புகளில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது

### 1. வெளி நபர்களுக்கான பொறுப்பு

இயக்குநர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு உட்பட்டு செயல்படும்போது தனிப்பட்ட முறையில் அவர்கள் வெளி நபர்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய அவசியம் இல்லை.

பொது விதிகளின்படி எந்த ஒரு முகவரும் பொறுப்பேற்க வேண்டிய செயலுக்கு இயக்குநர் பொறுப்பாளர்கள் ஆனால் உரிமையாளர் பொறுப்பேற்க வேண்டிய செயல்களுக்கு நிறுமம் பொறுப்பாகிறது பின்வரும் நிகழ்வுகளில் இயக்குநர்கள் மூன்றாம் நபராக தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்கள்

1. இயக்குநர்கள் தங்களின் சொந்த தகுதியின் அடிப்படையில் மூன்றாம் நபர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள்
2. இயக்குநர்கள் முகவர்கள் என்ற அதிகாரத்தின் அடிப்படையில் செய்துகொண்ட ஒப்பந்தம் பற்றி விவரம் முதல்வருக்கு தெரிவிக்கப்படாமல் இருத்தல்
3. வருங்கால நிறுமத்தின் சார்பாக ஒப்பந்தங்களில் ஈடுபடுத்திக் கொள்ளுதல்
4. நிறுமத்தின் அதிகார வரம்பு மீறிய ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் இயக்குநர்கள் தங்களின் சட்டபூர்வமான கடமைகளிலிருந்து தவறும்போது மூன்றாம் நபர்களுக்கு தனிப்பட்ட முறையில் பொறுப்பாளர்களாக ஆகிறார்கள்

1. தகவல் அறிக்கையில் உள்ள தவறான செய்திகள்
2. முறையற்ற பங்கு ஒதுக்கீடு
3. குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச பங்களிப்பு செய்யாதவர்கள் செலுத்திய விண்ணப்ப பணத்தை திரும்ப செலுத்தாத போது
4. பங்கு மாற்று சந்தையில் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை ஒதுக்கீடு செய்யப்படாதவர்கள் செலுத்திய விண்ணப்பத் தொகையை திரும்ப செலுத்தாத சூழ்நிலையில்

### 2. நிறுமம் தொடர்பான பொறுப்பு

இயக்குநர்கள் கீழ்க்கண்ட சூழல்களில் நிறுமத்திற்கு பொறுப்பாளர்களாக மாறுகிறார்கள்

இயக்குநர்கள் நிறுமத்தின் அதிகார வரம்பு மீறிய செயல்களில் ஈடுபட்டிருந்தால்

இயக்குநர்கள் உண்மையாகவே செயல்பட்டு இருந்தாலும் இது போன்ற சமயங்களில் மோசடியை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை உதாரணமாக நிறுமத்தின் அல்லது நிறுமத்தின் நிதியை அமைப்பு முறை சாசனத்தில் குறிப்பிடப்படாத செயல்களில் ஈடு படுத்திருத்தல் அல்லது மூலதனத்திலிருந்து பங்கஆதாயம் வழங்கி இருக்கும் பொழுது அதிகார வரம்பு மீறிய செயலாகக் கருதப்படும்

#### இயக்குநர்கள் கவனக் குறைவாகவோ அல்லது அலட்சியமாகவோ செயல்பட்டிருந்தால்

இயக்குனரின் கவனக்குறைவான செயல்பாடுகள் அவர்களின் பொறுப்பை அதிகப்படுத்தும் ஆனால் அவர்கள் மோசடியில் ஈடுபட்டதாக கருதப்படாது மேலும்

நிறுமத்தின் நலன் கருதி உண்மையிலேயே செயல்பட்டிருந்தால் தவறுக்கு பொறுப்பாக மாட்டார்கள்.

### இயக்குனரின் நம்பிக்கை மீறிய செயல்கள்

இயக்குநர்கள் நிறுமத்தின் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டும் அவர்கள் நிறுமத்தின் நலனுக்காகவே தங்களின் கடமைகளை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் அல்லது பாடுபடவேண்டும். நிறுமத்தின் நலன் கருதியே அவர்களின் கடமைகளை சரிவர செயபட வேண்டும். இயக்குநர்களின் நம்பிக்கை மீறிய செயலால் ஏற்படும் நட்டத்திற்கு அவர்களே முழு பொறுப்பாக மாறுகிறார்கள். உதாரணமாக இயக்குநர்கள் தங்கள் சொந்த நலனுக்காக நிறுமத்தின் சொத்துகளை பயன்படுத்துகையில் அவர்கள் மீதான நம்பிக்கை இழக்கப்படுகிறது மேலும் அவர்கள் குற்றம் இழைத்தவர்கள் ஆகும் நம்பிக்கை மீறிய செயல்களில் ஈடுபட்டவர்களகவும் கருதப்படுவர்.

### இயக்குநர்கள் தவறாக செயல்படுதல்

இயக்குநர்கள் தங்களின் தவறான செயல் பாடுகளுக்கு அவர்களே பொறுப்பு ஆகிறார்கள். தவறாக செயல்படுதல் என்று கூறும் பொழுது அதில் வேண்டுமென்றே அலட்சியமாக செயல்படுவதும் அடங்கும். இயக்குநர்களால் போதுமான நடவடிக்கைகள் எடுத்து பிறகும் நிறுமத்தின் வசூலாகாத கடன் களுக்கு இயக்குநர்கள் தவறாக செயல்படுதல் என்ற வரையறைக்குள் அடங்காது மேலும் அதற்கு அவர்கள் பொறுப்பாக மாட்டார்கள். நிறுமம் கலைக்கப்படும் போது நீதிமன்றம் கடனாளிகள், நிறுமம் கலைப்பாளர் மற்றும் பங்களிப்பாளர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில் இயக்குநர்களின் தவறாக செயல்படுதல் என்ற தன்மையை ஆராயலாம்.

### 3.இயக்குநர்களின் குற்றவியல் சார்ந்த பொறுப்புகள்

சட்டபடி செய்யவேண்டிய செயல்களை செய்யாத போதும் மோசடிக்கு உடந்தையாக இருந்திருந்தால் இயக்குநர்களுக்கு அபராதம் மற்றும் சிறை தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

1. தகவல் அறிக்கையில் தவறான தகவல்களை அளித்தல்
2. பங்கு ஒதுக்கீட்டிற்கான தகவல்களை உரிய படிவத்தில் நிறுமத்தின் பதிவாளருக்கு சமர்ப்பிக்க தவறுதல்
3. நிறுமப் பதிவாளர் பங்குகளை ஒருங்கிணைந்த பங்குகளாக மாற்றியதற்கான அறிவிப்பை சமர்ப்பிக்க தவறுதல்
4. பங்குச் சான்றிதழ் மற்றும் கடனீட்டு பத்திர சான்றிதழ் வழங்க தவறுதல்
5. உறுப்பினர்களுக்கான பதிவேடுகள் மற்றும் கடனீட்டு பத்திரதார்களுக்காண பதிவேடுகளை பராமரிக்கத் தவறுதல்
6. ஆண்டு நிறுமம் பொதுக் கூட்டத்தை கூட்ட தவறுதல்
7. நிதிநிலை அறிக்கை வெளியிட அல்லது வழங்கிட தவறுதல்

## 27.16 இயக்குநர்களின் பதிவேடு அல்லது இயக்குநர்கள் மற்றும் நிர்வாகத்தில் முக்கிய மேலாண்மை நபர்களின் பதிவேடு விதி 17 ன் படி

நிறுமத்தின் சட்டப்படி இயக்குநர்கள் பதிவேடு என்பது பங்குதாரர்களால் தேர்வு செய்யப்பட்ட இயக்குநர்களின் பட்டியலாகும் பொதுவாக இது நிறுமத்தின் கூட்ட நடவடிக்கை எழுதப்படும். சட்டப்படி இதுநாள்வரை இயக்குனராக பதவியிலிருந்து இறந்தவர்கள் பதவி விலகியவர்கள் பதவியில் இருந்து நீக்கப்பட்டவர்கள் போன்றவற்றின் விவரங்களை பட்டியலிட்டு வைத்திருக்க வேண்டும் மேலும் பங்குதாரர்களால் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியலும் இருக்க வேண்டும்.

**1. ஒவ்வொரு நிறுவனத்திலும் தனது பதிவாளர் அலுவலகத்தில் இயக்குநர்களுக்கான பதிவேட்டை வைத்திருக்க வேண்டும் மேலும் மேலாண்மையில் முக்கிய நபர்களின் விவரங்களையும் அதில் பதிவு செய்திருக்கவேண்டும் கீழ்க்கண்ட விளக்கங்கள் அந்த பதிவேட்டில் இடம் பெற்றிருக்க வேண்டும்**

1. இயக்குநர்களின் அடையாள எண் நிர்வாகத்தில் முக்கிய நபர்களின் அடையாள எண் விருப்பத்திற்கிணங்க பதிவு செய்யலாம்
2. தற்போது அவரின் பெயர் மற்றும் புனைப்பெயர்கள்
3. முன்னாள் பெயர் மற்றும் புனைப்பெயர்
4. தந்தையின் பெயர் தாயின் பெயர் மற்றும் மனைவியின் பெயர் திருமணமாகியிருந்தால் மற்றும் புனைப்பெயர்கள்
5. பிறந்த தேதி
6. குடியிருப்பு முகவரி தற்போதைய மற்றும் நிரந்தர
7. தேசியத் தன்மை பிற நாட்டவர் உட்பட
8. தொழில்
9. குழுவினால் நியமனம் செய்யப்பட தீர்மானத்தின் தேதி
10. நிறுமத்தின் நியமனம்
11. விளையாட்டு அல்லது மறு நியமனம் செய்யப்பட்ட தேதி

12. அலுவலகத்தை விட்டு வெளியேறிய தேதி மற்றும் அதன் தொடர்பான காரணம்

13. இதர நிறுவனங்களில் இயக்குனராக அல்லது நிர்வாக மேலாண்மை நபராக இருந்தமை மற்றும் விட்டு விட்டுதற்கான விவரம்

14. நிறுமச் செயலாளராக இருந்தால் நிறுமச் செயலர் நிறுவனத்தில் உறுப்பினர் எண்

15. நிரந்தர கணக்கு எண் நிர்வாகத்தில் முக்கிய அதிகாரிகளுக்கு DIN எண் இல்லாதழுது இது கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும்

**2. இயக்குநர்கள் மற்றும் இவர்களுடன்நிர்வாகத்தில் முக்கிய மேலாண்மை நபர்களின் மேற்கண்ட விவரங்களை இவைகளுடன் அவர்கள் நிறுமத்தின் மற்றும் படிப்பு நிறுமம் துணை நிறுமம் துணை நிறுமத்தின் பிடிப்பு நிறுமம் மற்றும் இணைய நிறுமங்கள் ஆகியவற்றில் இயக்குநர்கள் வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை போன்றவற்றை பதிவேட்டில் பதியப்பட்டு இருக்க வேண்டும் மேலும் அது தொடர்பான கீழ்க்கண்ட விவரங்களையும் பதியவேண்டும்**

1 பிணையங்களின் எண்ணிக்கை அது தொடர்பான விபரங்கள் மற்றும் பேரளவு மதிப்பு போன்றன

2 பிணையத்தை கொள்முதல் செய்த தேதி மேலும் அதன் விலை அல்லது இதர செலுத்தப்பட்ட மறு பயன்கள்

3 பிணையங்களை விற்பனை செய்த தேதி மற்றும் விலை மற்றும் அது தொடர்பாக பெறப்பட்ட இதர மறு பயன்கள்

4 ஒவ்வொரு பரிவர்த்தனைக்கும் பின்னரும் மீதம் உள்ள பிணையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் கூடுதல் இருப்பு

5 பிணையங்களை கொள்முதல் செய்த முறைகள்

6 பிணையங்கள் கையகப் படுத்தியுள்ள வடிவம் – தாள் வடிவம் அல்லது மின்னணு வடிவம்

7 பிணையங்கள் அடமானம் செய்யப்பட்டுள்ளதா அல்லது அவற்றின் மீது ஏதாவது பற்று உரிமை (வில்லங்கங்கள்) ஏற்படுத்தப்பட்டு உள்ளதா என்பதைப் பற்றி குறிப்பிட வேண்டும்

**3. மேற்கூறியவை மட்டுமல்லாமல் கீழ்க்கண்ட பதிவேடுகள் கண்டிப்பாக நிறுமத்தின் பதிவு அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும் அவை**

1. கடன்கள் உத்திரவாதம் பிணையங்கள் மற்றும் நிறுமத்தின் கையகப்படுத்தப்பட்ட தொடர்புடைய பதிவேடுகள்

2. நிறுமத்தின் சொந்த பெயரில் முதலீடு செய்யப்படாத முதலீடுகளின் விவரம் பற்றிய பதிவுகள்

3. தொடர்புடைய நபர்களால் ஒப்பந்ததாரர்கள் மற்றும் அமைப்புகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் மற்றும் அதில் இயக்குநர்களின் பங்கு போன்றவற்றை பதிவு செய்துள்ள ஏடுகள் அல்லது புத்தகங்கள்

4. இயக்குநர்கள் மற்றும் மேலாண்மையில் முக்கிய நபர்களின் விபரம் பற்றிய பதிவேடுகள்

5. இயக்குநர்கள் மற்றும் மேலாண்மையில் முக்கிய நபர்கள் வைத்திருக்கும் பிணையங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய பதிவேடுகள்

6. உறுப்பினர்கள் பற்றிய பதிவேடுகள்

7. கடனீட்டுப் பத்திரம் வைத்திருப்போர் மற்றும் இதர பிணையங்களை வைத்திருப்போர் பற்றிய பதிவேடுகள்

8. அயல்நாட்டு பதிவேடுகள் வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் சூழல்கள் பற்றிய அறிவிப்பு அல்லது சூழலில் ஏற்பட்ட மாற்றம் அல்லது சூழலை இடைநிறுத்தம் செய்யப்பட்டது போன்ற விவரம்.

9. பதிவுசெய்யப்பட்ட உரிமையாளர்கள் வைத்திருக்கும் பங்குகள் மற்றும் அதை வைத்திருப்போருக்கு எந்தவிதமான பலனும் இல்லை என்பது பற்றிய பிரகடனம்.

10. பலன்பெறும் உரிமையாளர்கள் வைத்திருக்கும் பங்குகள் அல்லது அவற்றின் மீது அவர்கள் அடைந்துள்ள நன்மைகள் ஆனால் அவர்களின் பெயர் உறுப்பினர் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான பிரகடனம். மேலாளர் மற்றும் இயக்குநர் இடையே உள்ள வித்தியாசம்

## 27.17 மேலாளர் மற்றும் இயக்குநர் இடையே உள்ள வேறுபாடுகள்

| அடிப்படை | மேலாளர் | இயக்குநர் |
|---|---|---|
| பொருள் | நிறுமத்தின் குறிப்பிட்ட துறையில் பொறுப்பாளராகவும் அந்தத் துறையில் செயல்களுக்கு பொறுப்பு ஆகும் இருப்பவரை மேலாளர் என அழைக்கப்படுகிறார் | நிறுமத்தின் இலக்கை அடையும் பொருட்டு பங்குதாரர்களால் நியமிக்கப்பட்டு அதன் குறிக்கோள்களை அடைவதற்காக நிறுமத்தை வழி நடத்துபவரே இயக்குநர் என அழைக்கப்படுகிறார் |
| பணியின் தன்மை | தனது கிழ் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு அவர்களின் பணியின் தன்மைக்கு ஏற்றவாறு வேலைகளை ஒதுக்கீடு செய்பவர் மேலாளர் மேலும் ஒரு குறிப்பிட்ட பணியினை யாரால் செய்து முடிக்கப்பட வேண்டும் மேலும் அதற்குத் தேவையான வழிகாட்டுதலை வழங்கி என்ன செய்ய வேண்டும் எப்பொழுது செய்ய வேண்டும் எப்படி செய்ய வேண்டும் என முடிவு செய்பவர் | இயக்குனரான ஒருவர் கொள்கைகளை நடைமுறைப்படுத்தி மேலும் அது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை வழிமுறைகளை மேலாளர்களுக்கு வழங்குபவர் மேலும் அந்த வேலையை எவ்வாறு செய்ய வேண்டும் என வழிகாட்டுபவர். |
| மேலாண்மையின் நிலை | மேலாளர் என்பவர் மேலாண்மையில் செயலாக்க நிலையில் வருகிறார் அதாவது இடைநிலை மேலாண்மையில் இடம் பெற்றுள்ளார். | இயக்குநர் என்பவர் மேல்நிலை மேலாண்மையில் வருகிறார் முடிவெடுத்தலில் மிக முக்கிய இடத்தை பெறுகிறார் |
| பொறுப்புகள் | இயக்குநர் அவையால் ஒப்புக்கொள்ளப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட திட்டங்கள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பினைமேலாளரிடம்ஒப்படைக்கப்படுகிறது | நிறுமத்தின் முக்கிய நோக்கை அடையும் பொருட்டு காலத்துக்கு தக்கவாறு தேவையான திட்டங்களையும் கொள்கைகளையும் இயக்குநர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது |

## 27.18 மேலாண்மை இயக்குநர் மற்றும் முழு நேர இயக்குநர் இடையேயான வேறுபாடுகள்

| வ.எண் | அடிப்படை | மேலாண்மை இயக்குநர் | முழுநேர இயக்குநர் |
|---|---|---|---|
| 1 | அதிகாரம் | கணிசமான அதிகாரங்களை வைத்திருப்பவர் நிர்வாக இயக்குநர் | பணி அமர்த்தும் போது அவருடைய பணி ஆணையில் அதிகாரங்கள் பற்றி சொல்லப்பட்டு இருக்கும் |
| 2 | தடைகள் | பிரிவு 197 இன் படி மேலாண்மை இயக்குனராகவும் மேலும் ஒரு மேலாளராகவும் ஒரே சமயத்தில் பணியாற்றதடைவிதிக்கப்பட்டுள்ளது | சில நேரங்களில் முழுநேர இயக்குனரே நிறுமத்தின் மேலாளராகவும் மேலும் இயக்குனராகவும் பணி அமர்த்தப்படுவது உண்டு |
| 3 | பதவி நியமனம் | மேலாண்மை இயக்குனரை பணி நியமனம் செய்வதற்கான தீர்மானத்திற்கு பங்குதாரர்களின் ஒப்புதல் தேவை இல்லை | முழுநேர இயக்குனரை நியமனம் செய்வதற்கு சிறப்பு தீர்மானத்தின் மீது பங்குதாரர்களின் ஒப்புதலை பெற்றிருத்தல் வேண்டும் |
| 4 | பதவியின் கால அளவு | ஒரு தனிநபர் எந்த சூழலிலும் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இப்பணியில் அமர்த்துவது கிடையாது | அவ்வாறான கட்டுப்பாடு முழுநேர இயக்குனரை பணி நியமனம் செய்வதற்கு கிடையாது |

உங்களுக்கு தெரியுமா?

பெரிய தனியார் நிறுமங்களில் பணியாற்றும் இந்திய வம்சாவழி தீவுகளின் ஆண்டு வருமானம் 10 கோடியிலிருந்து 20 கோடி இரண்டு ஆண்டுகளில் உயர்ந்துள்ளது இவ்வாறான சம்பள உயர்வு அவர்களின் பணி நலன்களை தூண்டுவதாக மேலும் கட்டாயப்படுத்துவதாக அமைகிறது

2015 16 நிதியாண்டில் உயர்மட்ட நிர்வாகத்தில் பணியாற்றும் CEO மற்றும் மேலதிகாரிகளின் சராசரி ஊதியம் சுமார் 19 கோடி ஆகும்

மேற்கண்ட ஊதியம் அவருக்கு சேர வேண்டிய சம்பள கழிவு படிகள் மற்றும் சலுகைகள் மேலும் தொழிலாளர்களுக்கான பங்கு விருப்ப திட்டம் தொடர்புடைய பயன்கள் அனைத்தும் சேர்ந்தது

இந்தியாவில் மிக உயர்ந்த ஊதியம் பெறும் CEO பெயர் மற்றும் விவரங்களை தெரிந்து கொள்வது சுவாரஸ்யமா?

| பெயர் | ஆண்டு சம்பளம் | நிறுமத்தின் பெயர் |
|---|---|---|
| எம். நாயக் | ₹. 66,14 | எல் அண்ட் டி |
| விஷால் சிக்கா | ₹. 48,73 | இன்போசிஸ் |
| தேஷ் பந்து குப்தா | ₹. 44.80 | லூபின் லிமிடெட் |
| சந்திரசேகரன் | ₹. 25,60 | டிசிஎஸ் |
| ராகுல் பஜாஜ் | ₹. 22.32 | பஜாஜ் குழுமம் |
| யோகேஷ் சந்தர் தேவேஷ்வர் | `. 15.15 | ஐடிசி லிமிடெட் |
| முகேஷ் அம்பானி | `. 15.00 | ஆர்ஐஎல் |
| சஞ்சிவ் மேத்தா | `. 13.87 | இந்துஸ்தான் யூனிலீவர் லிமிடெட் |
| அபிதாலி நீமுச்வாலா | `. 11,96 | விப்ரோ |
| கோபால் வெட்டல் | `. 10.40 | பார்தி ஏர்டெல் |

## கலைசொற்கள்

| | |
|---|---|
| இயக்குனர்கள் குழு | இயக்குனர்கள் |
| மேலாண்மை இயக்குனர் | இயக்குனர்களின் பதிவேடு |
| தோற்றுவிப்பாளர் | தகுதிகள் |
| பதிவு அலுவலகம் | வாக்களிக்கும் உரிமைகள் |

## பயிற்சி

9A9KT6

### I சரியான விடையைத் தேர்ந்தெடு:

1 நிறுமச் சட்டம் 2013–ன்படி ஒரு நபர் இயக்குனராக _______ நிறுமங்களுக்கு மேல் பதவி வகிக்க கூடாது

அ) 5 நிறுமம் ஆ) 10 நிறுமம்

இ) 20 நிறுமம் ஈ) 15 நிறுமம்

2 எந்த இயக்குநர் நிதி நிறுமதத்தால் நியமிக்கப்படுகிறார்?

அ) பெயரளவு ஆ) கூடுதல்

இ) பெண் ஈ) நிழல்

3 ஒரு தனியார் நிறுமம் குறைந்தது _______ இயக்குநர்கள் இருக்க வேண்டும்

அ) ஏழு ஆ) ஐந்து

இ) மூன்று ஈ) இரண்டு

4 ஒரு பொது நிறுமத்தில் குறைந்தது _______ இயக்குநர்கள் இருக்க வேண்டும்

அ) 12 ஆ) 7

இ) 3 ஈ) 2

5 ஒரு பொது நிறுமத்தில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் _______ அல்லது அதற்கு மேல் இருக்கும் பொழுது சிறிய பங்குதாரர்களால் இயக்குநர் தேர்ந்தெடுக்கப்படலாம்.

அ) 1 கோடி ரூபாய் ஆ) 3 கோடி ரூபாய்

இ) 5 கோடி ரூபாய் ஈ) 7 கோடி ரூபாய்

6 நிறுமச் சட்டத்தின் படி கீழ்கண்ட அதிகாரங்களில் ஒன்று இயக்குநர்களின் குழுவால் செயல்படுத்த முடியும்

அ) நிறுமத்தை விற்கும் அதிகாரம்

ஆ) அழைப்பு பணத்துக்கு அழைப்பு விடும் அதிகாரம்

இ) செலுத்தப்பட்ட மூலதனத்திற்கு மேல் கடன் வாங்கும் அதிகாரம்

ஈ) தணிக்கையாளர்களை மீண்டும் பதவி நியமனம் செய்யும் அதிகாரம்

7 எந்த இயக்குநர் தகுதிப்பங்குகளை வைத்திருக்க வேண்டிய அவசியமில்லை?

அ) மத்திய அரசால் நியமிக்கப்படும் இயக்குநர்

ஆ) நிறுமத்தின் பங்கு தாரர்களால் நியமிக்கப்படும்



12th Commerce Tamil Unit 10.indd 265 21-02-2020 14:45:33

இயக்குநர்

இ) நிறுமத்தின் மேலாண்மை இயக்குநர்களால் நியமிக்கப்படும் இயக்குநர்

ஈ) நிறுமத்தின் இயக்குநர் குழுவால் நியமிக்கப்படும் இயக்குநர்

8 **இயக்குநர்கள் நிறுமத்தின் பணத்திற்கு _______ ஆகிறார்கள்.**

அ) வங்கியாளர் ஆ) பங்குதாரர்கள்

இ) முகவர் ஈ) பொறுப்பாண்மையாளர்கள்

9 **நிறுமச் சட்டப்படி இயக்குநர்கள் _______ மூலம் நியமிக்கப்பட வேண்டும்**

அ) மத்திய அரசு

ஆ) நிறுமச் சட்ட வாரியம்

இ) நிறுமத்தின் ஆண்டு பொதுக்கூட்டம்

ஈ) இயக்குநர்கள் குழு

10 **இயக்குநர்கள் குழு தனது அதிகாரத்தை பயன்படுத்தி இவ்வகையான இயக்குநர்களை நியமனம் செய்யலாம்**

அ)கூடுதல் இயக்குநர்கள்

ஆ) சாதாரணமாக ஏற்படும் காலி பணியிடத்தை நிரப்புதல்

இ) மாற்று இயக்குநர்கள்

ஈ) மேற்கூறிய அனைத்தும்

**விடைகள் :**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | இ | 2 | அ | 3 | ஈ | 4 | இ | 5 | இ |
| 6 | ஆ | 7 | அ | 8 | ஈ | 9 | இ | 10 | ஈ |

## II. குறு வினாக்கள்:

1 இயக்குநர் என்பதை வரையறுக்க.

2 மேலாண்மையில் முக்கிய நபர்களை எவ்விதமான நிறுமங்கள் நியமனம் செய்திருக்க வேண்டும்?

3 முழுநேர இயக்குநர் என்பவர் யார்?

4 மேலாண்மை இயக்குநர் என்று யாரை அழைக்கிறோம்?

5 எந்த இயக்குநர் செயல் இயக்குனராக செயல்பட முடியும்?

## III. சிறு வினாக்கள்

1 எப்பொழுது மாற்று இயக்குநர்களை நியமிக்கலாம்?

2 நிழல் இயக்குநர் என்று யாரை அழைக்கிறோம்?

3 ஒரு தனியார் நிறுமத்தில் குறைந்த அளவு எத்தனை இயக்குநர்கள் இருக்கவேண்டும் என்பதை குறிப்பிடுக

## III. பெரு வினாக்கள்:

1 நிர்வாகத்தில் முக்கிய நிர்வாக அதிகாரிகள் (KMP) என்பவர் யார்?

2 இயக்குனரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி.

3 இயக்குனரின் தகுதிகள் பற்றி கூறுக

4 இயக்குநர்களின் குற்றவியல் சார்ந்த பொறுப்புகளைப் பற்றி எழுதுக



12th Commerce Tamil Unit 10.indd 266 21-02-2020 14:45:33